
பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 29 திங்கட்கிழமை 15.11.2021 கதிர் 238

## மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் சிக்கினர்

நுவரெலியா, பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டியாகல பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவரைப் பொகவந்தலாவைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். ☞2

## வேகமெடுக்கும் கொரோனா தொற்று, மரணம் அதிகரிப்பு

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை



தொடர்ச்சியாகக் கடந்த சில தினங்களாகக் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கையும் மரணங்களின் தொகையும் அதிகரித்து வருகின்ற நிலையில் பொதுமக்கள் மிகவும் கவனமாகவும் பொறுப்புடனும் செயற்பட ☞2

## கொழும்பு போராட்டத்தில் கலந்துகொண்ட 12 விரிவுரையாளர்களுக்குக் கொரோனா!

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட தேசிய கல்வி விஞ்ஞானபீட விரிவுரையாளர்களில் 12 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

தேசிய கல்வி விஞ்ஞான பீட விரிவுரையாளர் தொழிற்சங்கத்தினால் கடந்த திங்கட்கிழமை கொழும்பு - இசுறுபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சுக்கு முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கல்வி அமைச்சால் தேசிய கல்வி விஞ்ஞான பீடத்தைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினூடாக ஆசிரியர் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தும் நடவடிக்கைகளைத் தாமதப்படுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ☞2

# அரசுக்கு எதிராக நாளை திட்டமிட்டபடி போராட்டம்

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தியால் நாளை கொழும்பு – ஹைட்பார்க் பகுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள போராட்டத்தை சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக முன்னெடுக்குமாறு ஐக்கியமக்கள் சக்திக்கு உத்தரவிடுமாறு பொலிஸார் விடுத்திருந்த கோரிக்கையை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. ☞2

## இந்திய மீனவர்கள் 23 பேரும் நிபந்தனையுடன் விடுதலை!

### சொத்துக்கள் பறிமுதல்!

அத்துமீறிய மீன்பிடிநடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 23 பேரும் பருத்தித்துறை நீதிமன்றத்தினால் இன்று நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ☞2

## சுதந்திரக் கட்சி தனித்து போட்டியிட வேண்டும்!

### தீர்மானம் நிறைவேற்றம்

வெற்றியோ, தோல்வியோ எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. எதிர்வரும் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனிக் கட்சியாகப் போட்டியிட வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அநுராதபுரம் மாவட்டக் குழு வலியுறுத்தி ☞2

## கிளிநொச்சியில் கல்லூரிக்கு முன் பாதசாரிக் கடவையில் மாணவி பலி

### மூன்று வாகனங்கள் மோதுண்டு அனர்த்தம்



கிளிநொச்சி ஊற்றுப் புலம் கிராமத்தில் இருந்து உயர் தரம் கற்பதற்கான அனுமதிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு வருகை தந்த மாணவிகள் ☞2

## விபத்தில் உயிரிழந்த மாணவிக்கு நீதிகோரி கல்லூரி முன் கவனவீர்ப்பு



கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்பாக இடம்பெற்ற வீதி விபத்தில் மாணவி ஒருவர் உயிரிழந்தமையைக் கண்டித்து கவனவீர்ப்புப் போராட்டம் ☞2

## தொடரும் சோதனை; மேலும் 86 பேர் கைது

நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் நேற்றும் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் கடந்த 24 மணித்தியாலங்களில் 86 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் இதுவரை 82 ☞2

## ‘யுகதனவி’ ஒப்பந்தத்துக்கு எதிரான சமர் தொடருமாம்

### கம்மன்பில கூறுகின்றார்



மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் மீறப்படுவதால்தான் அரசில் இருந்துகொண்டு எதிரணிப் பணியைச் செய்கின்றோம். தொடர்ந்தும் போராடுவோம். மௌனம் காக்கமாட்டோம் என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில ☞2

## தந்தையை இரும்புக்கம்பியால் தாக்கிக் கொலை செய்த மகன்

மனநலம் பாதிக்கப்பட்ட நபர், தனது தந்தையை இரும்புக் கம்பியால் தாக்கிப் படுகொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல், பனாகமுவ பிரதேசத்திலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் பனாகமுவ, கோபாலகெதர பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயது நபரே ☞2

## அடுத்த வாரம் முதல் பாடசாலைகள் அனைத்தும் முழுமையாக இயங்கும்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு



அடுத்த வாரம் முதல் பாடசாலைகள் அனைத்தும் முழுமையாக இயங்கும் என்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இன்று நாடாளுமன்றத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞2

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



## மாணிக்கக்கல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த 43, 52 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தொடரும் சோதனை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரத்து 293 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வேகமெடுக்கும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என சுகாதார அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

குறிப்பாக திருமண வைபவங்கள், மரண நிகழ்வுகள் உள்ளிட்ட நிகழ்வுகள் காரணமாகவே வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது எனவும், சுகாதார வழிமுறைகளை முறையாகப் பின்பற்றாது மக்கள் அலட்சியம் காட்டி வருகின்றனர் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தநிலை தொடருமானால் நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும், அதனால் மக்களே பல்வேறு பாதிப்புகளை எதிர்நோக்க வேண்டிவரும் என்றும் அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த இரண்டு நாள்களாகப் புதிய வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 700 ஐத் தாண்டியுள்ள நிலையில் நேற்று அது 718 ஆக அதிகரித்துள்ளது எனவும், மரணங்களின் தொகையும் கடந்த 3 நாள்களாக 20 ஐக் கடந்துள்ளது எனவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வாரத்தோடு ஒப்பிடுகையில் இந்த வாரத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் மரணங்களும் அதிகரித்துள்ளன.

அதற்கிணங்க நாட்டில் இதுவரை மொத்தமாக 5 லட்சத்து 49 ஆயிரத்து 500 பேர் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ள நிலையில், அவர்களில் 5 லட்சத்து 23 ஆயிரத்து 503 பேர் பூரண குணமடைந்துள்ளனர் எனவும், மேலும் 12 ஆயிரத்து 25 பேர் பல்வேறு வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## சுதந்திரக் கட்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளது.

இது தொடர்பில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அநுராதபுரம் மாவட்டக் குழுக்கூட்டம் இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன் போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசால் எமது கட்சிக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் மீறப்பட்டுள்ளன. புறக்கணிப்புகள் இடம்பெறுகின்றன. எனவே, முடிவு என்னவாக இருந்தாலும் அடுத்த தேர்தலில் தனித்துப் போட்டியிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## தந்தையை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரணமடைந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் குருநாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய 32 வயது நபரைக் கைதுசெய்துள்ள போகஸ்வெள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசுக்கு எதிராக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி, விவசாயத்துக்கும் பாடசாலைக் கல்வி மற்றும் பொருளாதாரத்துக்கும் இந்த அரசு ஏற்படுத்திவரும் அழிவைத் தடுப்பதற்காகவும், தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் நோக்கிலும் இந்தப் போராட்டத்தைத் திட்டமிட்டவாறு முன்னெடுக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. அறிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதேவேளை, எத்தடை வரினும் எமது போராட்டத்தை நிறுத்தப்போவதில்லை. கொரோனாவுக்கு மத்தியிலும் அன்று இந்திய விவசாயிகள் டெல்லியைச் சுற்றிவளைத்தனர். அதேபோல் நாளை நாம் கொழும்பைச் சுற்றிவளைப்போம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தப் போராட்டத்தில் அனைத்து மக்களும் பங்கேற்று அரசுக்கான தமது எதிர்ப்பை வெளியிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கொழும்பு போராட்டத்தில் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள விஞ்ஞானபீடத்தின் விரிவுரையாளர்கள் இருவருக்கு மேற்கோள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்றுக்குள்ளான விரிவுரையாளர்களில் ஒருவரின் குடும்பத்தில் அனைத்து அங்கத்தவர்களுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட தென் மாகாணத்திலுள்ள ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 10 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## இந்திய மீனவர்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மீனவர்கள் தொடர்பிலான வழக்கு விசாரணை இன்று பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, இதே மீனவர்கள் பத்து ஆண்டுகளுக்குள் இலங்கை கடல் எல்லைக்குள் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டால் சிறைத்தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்று உத்தரவிடப்பட்டது.

அதேவேளை, மீனவர்கள் பயணித்த படகுகள் இரண்டு, இழுமடி உட்பட்ட உபகரணங்களும் பறிமுதல் செய்யப்படுகின்றன எனதாக நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது. மீனவர்களை தாயகம் அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கையை இந்தியத் துணைத்தூதரகம் மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 'யுகதனவி' ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

யுகதனவி ஒப்பந்தம் மற்றும் திருகோணமலை உடன்படிக்கை ஆகியவற்றுக்கு எமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளோம். இந்த விடயத்தில் எமது நிலைப்பாடு மாறாது. பின்வாங்கவும் மாட்டோம். அடுத்த அமைச்சரவைக் கூட்டத்திலும் இது தொடர்பில் பேசுவோம்.

20ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படும்போது அமைச்சரவையில் மௌனம் காத்து, வாத விவாதங்களில் பங்கேற்காமல் செய்த தவறை மீண்டும் செய்யமாட்டோம். அதற்காகவே தற்போது எமது கருத்துக்களை வெளிப்படையாக முன்வைத்து வருகின்றோம்.

அரசை சரியான பாதையில் வழிநடத்த வேண்டிய பாரிய பொறுப்பு எமக்கு உள்ளது - என்றார்.

## கிளிநொச்சியில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைக்கு முன்பாக ஏ9 வீதியின் மேற்கு பகுதியிலிருந்து பாடசாலை பக்கம் பாதசாரிக் கடவையில் வீதியை கடந்த போது ஏற்பட்ட விபத்தில் மாணவி ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார். மற்றுமொரு மாணவி காயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் இன்று காலை 8.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கிளிநொச்சி ஊற்றுப்புலம் பாடசாலையில் க.பொ.த.சாதாரண தரம் கல்வி கற்ற மாணவிகள் மூவர், கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு உயர்தர வகுப்பு அனுமதி பெறுவதற்காக பாடசாலைக்கு



வருகை தந்த போது இவ் விபத்துஏற்பட்டுள்ளது. ஏ9 வீதியில் மேற்கு பக்கத்திலிருந்து பாடசாலை பக்கமாக பாதசாரி கடவையில் வீதியை கடக்க முற்பட்ட போது ஏ9 வீதியில் பயணித்த பட்டா ரக வாகனம் மாணவிகள் கடந்து செல்வதற்காகத் திடீரென நிறுத்தியது. இதன் பின் வந்த மின்சார சபை ஒப்பந்தகாரருடைய ஹன்டர் ரக வாகனமும் நிறுத்தப்பட்ட போது பின்னால் வந்த இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ், ஹன்டர் ரக வாகனத்தை மோத, ஹன்டர் வாகனம் முன்னால் இருந்த பட்டாவுடன் மோத, குறித்த வாகனங்கள் இரண்டும் மாணவிகளுடன் மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. இதன் போது சம்பவ இடத்திலேயே திருவாசகம் மதுசாளினி (வயது 17) என்ற மாணவி இறந்தமையுடன் மற்றொரு மாணவி காயமடைந்துள்ளார்.

இந்தமாணவியின்தந்தைசைக்கிளில் நாளாந்தம் ஊற்றுப்புலத்திலிருந்து கிளிநொச்சி விறகு வெட்டி விற்பனை செய்யும் தொழிலாளி. மிகவும் வறுமைக்குட்பட்ட நிலையில் தனது மகளை உயர் தரத்திற்கு கற்பிக்க அனுப்பிய நிலையில் முதல் நாளே இப் பெரும் சோகம்நிகழ்ந்துள்ளது. சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## காரைநகர் விபத்தில் ஒருவர் பரிதாபச் சாவு

காரைநகர் டிப்போவுக்கு சமீபமாக இன்று பிற்பகல் ஓட்டோ - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் சம்பவ இடத்தில் பலியானார். மற்றொருவர் படுகாயமடைந்தார். பலியானவர் காரைநகர் நெய்தலைச் சேர்ந்தவராவார்.

## அடுத்த வாரம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து தர மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் அடுத்த வாரம் மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

ஒக்ரோபர் முதலாம் திகதிக்குப் பின்னர் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டன.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு முன்னர் 2 லட்சத்து 40 ஆயிரம் ஆசிரியர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி போட முடிந்தது - என்றார்.

தற்போது, ஆரம்பப் பிரிவு மற்றும் 10, 11, 12 மற்றும் 13 ஆம் தர மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்ததைத் தொடர்ந்து பல வாரங்களுக்குப் பாடசாலைகள் மூடப்பட்டன.

## விபத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டது.

இன்று காலை 8.15 மணி அளவில் கிளி நொச்சி மத்திய கல்லூரி முன்பாக மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி ஏற்பட்ட விபத்தின் காரணமாக பாதசாரி கடவையைக் கடக்க முற்பட்ட பாடசாலை மாணவி ஒருவர் பாதசாரிகள் கடவையில் வைத்து மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தை கண்டித்து இன்று சிவில் சமூக அமைப்புக்களைச் சேர்ந்தோர் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பெற்றோர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டு கவனவீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க வேண்டிய பொலிஸார் உரிய காலத்தில் கடமையில் இருப்பதில்லை என்றும், வாகன சாரதிகள் விழிப்புணர்வு இன்றி வாகனங்களைச் செலுத்துகின்றனர் எனப் பல்வேறு விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நெருங்குகிறது நெருக்கடி

**'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை' என்பார்கள். அந்த மாதிரியாகியிருக்கின்றது இலங்கை அரசினதும் மக்களினதும் நிலைமை.**

**கொரோனாத் தொற்றுப் பின்னடைவு, அதனால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள், முறையற்ற அரச நிர்வாகத்தினால் நேர்ந்த சீர்கேடுகள் என இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு மத்தியில் நாடு தடுமாறிக் கொண்டிருக்க, ஒரே வருடத்தில் அசேதனப் பசளைகளையும், இரசாயன உரங்களையும், களைக்கொல்லிகளையும் தடைசெய்து, பசுமை விவசாய புரட்சியை ஏற்படுத்துகிறோம் என்று அவசரப்பட்டு, மற்றொரு யுத்த முனையைத் திறந்தது தீர்க்கதரிசன நோக்கற்ற கோட்டாபய அரசு. சமய சந்தர்ப்பம், வாய்ப்பு – வசதிகள், சாதக பாதகங்களைச் சீர்தூக்கிப் பார்க்காமல், அரசியல் விடயங்கள் உட்பட அனைத்தையும் எதேச்சாதிகாரப் போக்கில் –இராணுவ நிர்வாகப் பணியில் – கையாளும் கோட்டாபய அரசு, அதே கணிப்பில் அசேதன இரசாயன உர இறக்குமதி தொடர்பில் 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' முடிவெடுத்து நாட்டையும், மக்களையும், நாட்டின் பொருளாதாரத்தையும் புதிய நெருக்கடிக்குள் ஆழ்த்தி இருக்கின்றது.**

**உச்ச சிக்கல்களில் மாட்டுப்பட்ட மக்களை – விவசாயிகளை – கோட்டா அரசின் தூரநோக்கற்ற – 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்ற பாணி அணுகுமுறை மோசமான நெருக்கடிக்குள் ஒரு புறம் ஆழ்த்தியது என்றால், மறு புறம் திடீரென ஏற்பட்ட இயற்கை அனர்த்தம்– வெள்ளப் பெருக்கு – தன் பங்குக்கு மிஞ்சிய எச்ச சொச்சத்தையும் வாரி விட்டுப் போயிருக்கின்றது.**

**திடீரென நடைமுறைக்கு – வலிந்து – பலாத்காரமாக – கொண்டு வரப்பட்ட அசேதன உரத்துக்குத் தடை என்ற விதி முறைக்கு, தயாராக இருக்க விவசாயிகள், இம்முறை பெரும் போகச் செய்கையை பெரும்பாலும் கோட்டைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இருந்த கொஞ்ச நஞ்ச சேதன உரங்களை வைத்து மத்திய மலைநாட்டில் மரக்கறி வகைகளின் உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகளை வெள்ளம் ஒரு கை பார்த்துவிட்டது. அவர்களது பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டமை மட்டுமன்றி, 'இருந்த வெள்ளத்தை வந்த வெள்ளம் அள்ளிச் சென்ற மாதிரி' அவர்கள் நிலத்தில் சேர்த்த சேதன உரத்தையும் வெள்ளம் அடித்துச் சென்று விட்டதாக விவசாய அமைச்சு வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன.**

**இதனால் மரக்கறி உற்பத்தியாளர்கள் பலருக்கு இரட்டை இழப்பு. ஏற்கனவே செய்கை பண்ணப்பட்ட பயிர்கள் அழிவு ஒருபுறம். கையிருப்பில் இருந்த சேதன இரசாயன கனிமங்களும் வெள்ளத்துடன் கரைந்து போய்விட்டன. மீண்டும் ஆரம்பத்திலிருந்து செய்வதற்கு நிதியும் இல்லை, சேதன உரமும் இல்லை.**

**இதனால் தம்புள்ள மத்திய மரக்கறி சந்தைக்கு மரக்கறி வகைகளின் வருகை அடியோடு பாதிக்கப்பட்டு விட்டது. இதனால் இருக்கும் எஞ்சிய மரக்கறி வகைகளின் விலைகள் எதிர்பாராத அதிகரிப்பு அளவுக்கு எகிறலாம் என்றும், சாதாரண குடும்பங்கள் மரக்கறி வகைகளை நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு பற்றாக்குறை – தட்டுப்பாடு – விலை உயர்வு – ஏற்படும் என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் எச்சரிக்கின்றன.**

**இதுவரை காலமும் அரசல்புரசல் பேச்சாக அடிபட்டு வந்த எரிபொருள் நெருக்கடி, பாமரனின் – சாதாரண பொதுமக்களின் – வீட்டு வாசலைத் தட்டும் அளவுக்கு வந்துவிட்டது. எரிபொருள் கையிருப்புத் தீர்ந்து விட்டமையால், சுத்திகரிப்பு வேலைகளை சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுத்தும் அளவுக்கு நாட்டின் நிலைமை போய் விட்டது. கழுத்தைப் பிடித்து இறுக்கும் நெருக்கடியான காலகட்டம் மிக நெருங்கி வந்துவிட்டது என்பதே இன்றைய யதார்த்த நிலைமையாகும்.**

# இலங்கை விவசாய அமைச்சுக்கு சீன நிறுவனம் நிபந்தனை விதிப்பு

மாசுபட்ட சேதனப்பசளைகளுடன் இலங்கைக்கு கப்பலை அனுப்பியுள்ள, சீனாவின் சேதனப்பசளை உற்பத்தியாளர் நிறுவனமான கியுன்டோ பயோடெக் குருப் கம்பனி லிமிடெட், தம்முடன் செய்துகொள்ளப்பட்ட அசல் கேள்விப்பத்திர உடன்படிக்கையில், ஏற்றுக்கொள்ளப்பட்ட விலையில் 70 சதவிகிதம் மற்றும் பசளைக்கான கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்று இலங்கையின் விவசாய அமைச்சகத்துக்கு நிபந்தனைகளை முன்வைத்துள்ளது.

மேற்படி நிறுவனத்தின் சேதனப்பசளைகள் அடங்கிய சர்ச்சைக்குரிய கப்பலை, சீனாவுக்கு திருப்பியழைக்கவேண்டும் என்று இலங்கையின் அரசாங்கம் கோரி வருவதை அடுத்தே இந்த நிபந்தனைகளை சீன நிறுவனம் விதித்துள்ளது.

இதன்படி தம்முடன் செய்துகொள்ளப்பட்ட ஆரம்ப உடன்படிக்கையின் எழுபது சதவிகிதம் (56 லட்சம் அமெரிக்க டொலர்கள்), பசளைகளுக்கான கட்டணமாக 3.6 கோடி டொலர்கள் என்பவற்றை தமக்குச் செலுத்தவேண்டும் என்று சீன நிறுவனம் கோருகிறது.

இந்த நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, எதிர்காலத்தில் தமது ஏற்றுமதிகளின் மாதிரிகள், புதிய சோதனைக்கு உட்படுத்தப்படக் கூடாது என்றும் நிறுவனம் நிபந்தனை விதித்துள்ளது.

இலங்கையின் விவசாய அமைச்ச மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் இரா ஜாங்க அமைச்சர் ஷீந்திர ராஜபக்ஷ ஆ யோருக்கு சீன நிறுவனத்தின் பணிப்பாள சொங் ஹாய் மெய்டோ நவம்பர் 9 ஆம் திக அனுப்பிய கடிதத்தில் இந்த நிபந்தனைக முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கடிதத்தின் நகல் கொமர்ஷிய பேர்டிலைசர்ஸ் லிமிடெட் மற்றும் சிலோ பேர்டிலைசர் கம்பனி லிமிடெட் ஆகியவ றின் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது

இதேவேளை சனிக்கிழமை மாலை நிலைவரப்படி, கொழும்பு துறைமுகத்தி இருந்து 25 கடல் மைல் தொலைவி களுத்துறைக்கு அருகில் 20 ஆயிரம் மெ றிக் தொன் மாசுபட்ட பசளைகளை ஏற் வந்த ஹிப்போ ஸ்பிரிட் என்ற கப்ப கண்காணிக்கப்பட்டது. கடந்த வாரம், கப்ப சிறிது நாள்கள் காணாமல் போன பிறகு கட ரேடர்களில் மீண்டும் அது கண்காணிப்ப டுள்ளது. இதற்கிடையில் இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் விச ரணை கொழும்பு வர்த்தக மேல் நீதிமன றத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.





# போசாக்குக் குறைவுடன் வவுனியாவில் சிறுவர்கள்

வவுனியா, கண்ணன் கோட்டம் மற்றும் கருப்பனிச்சங்குளம் கிராமத்தில் 82 சிறுவர்கள் போசாக்கு மட்ட குறைவுடன் இனங்காணப்பட்டுள்ள நிலையில், 3 மாதத்துக்குள் அவர்களின் போசாக்கை அதிகரிக்க துரித நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட சுகாதார திணைக்களமும், ரகமா நிறுவனமும் இணைந்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளன. வவுனியா மாவட்ட சுகாதாரத் திணைக்களமும், ரகமா நிறுவனமும் இணைந்து 'சிறுவர்களுக்கான போசாக்கு மட்டத்தை அதிகரித்தல்' என்னும் தொனிப்பொருளில் வவுனியா, கண்ணன் கோட்டம் மற்றும் கருப்பனிச் சங்குளம் ஆகிய கிராமங்களில் 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் போசாக்கு மட்டம் தொடர்பான ஆய்வு ஒன்றை முன்னெடுத்திருந்தன. அதனடிப்படையில் போசாக்கு உணவு இன்மை, வறுமை மற்றும் வரும னத்துக்கு மேலதிகமான நாளாந்த குடும்ப செலவு என்பன காரணமாக பல சிறுவர்க சீரான முறையில் போசாக்கு உணவைப் பெ முடியாத நிலையில் இருக்கின்றமை கண்ட யப்பட்டது. இவ்வாறு 82 சிறுவர்கள் போசா குக் குறைவுடன் இனங்காணப்பட்டனர்.

மேற்படி இனங்காணப்பட்ட சிறுவர்களி ஊட்டச்சத்தின் அளவை 3 மாத காலப்ப திக்குள் அதிகரிக்கச் செய்யும் நோக்கில் சுகாதாரத் திணைக்களத்தின் வழிகாட்டலி ரகமா நிறுவனத்தால் இனங்காணப்பட் சிறுவர்களுக்கு போசாக்கான உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்த சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் ரகமா நிறுவன உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# தாய்லாந்தில் கொவிட்டால் 20ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சாவு!



தாய்லாந்தில்கொரோனா வைரஸ்(கொவிட்-19)பெருந் தொற் றினால், மொத்தமாக 20ஆயிரத்திற்கும் மேற் பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, தாய்லாந்தில் மொத்தமாக 20 ஆயிரத்து 34பேர் உயிரிழந்துள்ளனர்.

உலகளவில் கொவிட் தொற்றினால் அதிக பாதிப்பினை எதிர் கொண்ட 24 ஆவது நாடாக விளங்கும் தாய்லாந்தில் இதுவரை 20லட்சத்து 18ஆயிரத்து 410 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் வைரஸ் தொற்றினால், ஏழாயிரத்து 79பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு 47பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள 95ஆயிரத்து 530 பேர் அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் ஆயிரத்து 997 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

அத்துடன் இதுவரை வைரஸ் தொற்றிலிருந்து மொத்தமாக, 19 லட்சத்து இரண்டாயிரத்து 846 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

# ஐரோப்பா செல்லும் கடும் முயற்சியில் பெலாரஸ் எல்லையில் புலம்பெயர்மக்கள்



பெரும்பாலும் ஈராக், சிரியா மற்றும் ஏமன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள், போலந்துடனான பெலாரஸின் எல்லையில் உள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் நுழையும் நம்பிக்கையில் உறைபனி காலநிலைக்கு மத்தியிலும் அவர்கள் எல்லையில் இருக்கின்றனர் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

மேலும் அவர்களின் நிலை மோசமாக இருப்பதாகவும் பலர் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர் எனவும் பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது. பெலாரஸை விட்டு வெளியேற முயற்சிப்பவர்களுக்கு போலந்திற்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டுள்ளது அத்தோடு முள்வேலி மற்றும் ஆயிரக்கணக்கான பாதுகாப்புப் படையினர் நிறுத்தப் பட்டுள்ளனர். அவர்கள் உறைபனி காரணமாக கடும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ள நிலையில் அவர்களுக்கு முக்கியப் பொருள்கள் அல்லது மருத்துவ உதவிகள் கிடைக்கவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சூடான் ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிரான போராட்டத்தில் 5 பேர் உயிரிழப்பு

சூடானில் நேற்று இடம்பெற்ற ஜனநாயக சார்பு ஆர்ப்பாட்டங்களின் போது ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர் என மருத்துவர்கள் குழு தெரிவித்துள்ளது.

நான்கு பேர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களால் இறந்தனர் எனவும் ஒருவர் கண்ணீர்ப்புகை தாக்குதலினால் ஏற்பட்ட மூச்சுத் திணறலால் இறந்தார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் ஆட்சிக்கவிழ்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்லாயிரக்கணக்கானோர் வீதிகளில் இறங்கி போராடி வருகின்றனர்.

இதேவேளை போராட்டத்தின்போது ஏற்பட்ட மோதலில் 39 பொலிஸார் படுகாயமடைந்தனர் என அரசு தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. இராணுவம் தலைமையிலான ஆளும் தரப்பு அறிவிக்கப்பட்ட சில நாள்களுக்குப் பின்னர் இந்தப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.



# உலகில் அதிக காற்று மாசுள்ள நகரமாக லாகூர் அறிவிப்பு



பாகிஸ்தானின் லாகூர் நகரில் காற்றை மாசுபடுத்தும் தூசு துகள்கள் அதிக அளவில் கலந்துள்ள நிலையில், உலகிலேயே அதிக காற்று மாசுள்ள நகர மாக பாகிஸ்தானின் லாகூர் நகரம் அறிவிக்கப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் காற்று மாசுபாட்டை குறிக்கும் காற்றின் தரக் குறியீடு நேற்று வெளியிடப்பட்ட நிலையில், லாகூரில் காற்றின் தரக் குறியீட்டு எண் 500க்கு மேல் தொடர்ந்து 4 ஆவது நாளாகவும் பதிவாகியுள்ளது.

இதேவேளை, காற்று மாசு தொடர்பில் பாகிஸ்தானில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. வழக்கை விசாரித்த நீதிபதி அரசின் சார்பில் காற்று மாசுபாட்டைத் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கவலை வெளியிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# தாய்வனைப் பாதுகாக்க ஆஸ்திரேலியா நடவடிக்கை எடுக்குமாம்

தாய்வானை பாதுகாப்பதற்குத் தேவை ஏற்படின் அமெரிக்காவுடன் இணைந்து செயற்பட முடியும் என ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

தாய்வான் மீது சீனா தமது பலத்தைப் பயன்படுத்துமாயின் அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் பதில் நடவடிக் கையை மேற்கொள்ளும் என ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தாய்வானை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக தமது பலத்தைப் பயன்படுத்துவதைச் சீனா இதுவரை யில் நிராகரிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் சீனா போர் ஏற்படக் கூடும் என்ற கருத்தை மறுத்து வரும் நிலையில் குறித்த விடயத்தில் உண்மையாகவும் நேர்மையாகவும் செயற்பட வேண்டும் என ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ரவிச்சந்திரனுக்கு 30 நாள்கள் பரோல்



ராஜீவ் கொலை வழக்கில் கைதாகி மதுரைச் சிறையில் உள்ள ரவிச்சந்திரனுக்கு 30 நாள் பரோல் வழங்கி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் ஏழு பேர் சிறையில் உள்ளனர். அவர்களில், மதுரை மத்திய சிறையிலுள்ள ரவிச்சந்திரன் மற்றும் அவரது தாய் தரப்பில் ரவிச்சந்திரனுக்கு 30 நாள் பரோல் வழங்கி உத்தரவிட வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மதுரை வந்தபோது கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது.

அதனையடுத்து மதுரை மத்திய சிறையில் உள்ள ரவிச் சந்திரனுக்கு 30 நாள் பரோலில் வெளியே செல்ல தமிழக சிறைத்துறை உத்தரவை வழங்கியுள்ளது. குடும்பத்தினரைச் சந்திப்பது மற்றும் மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டும் உள்ளிட்ட காரணங்களுக்காக ரவிச்சந்திரனுக்குப் பரோல் வழங்கவேண்டுமென நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. இன்று 15 ஆம் திகதி சிறையிலிருந்து வெளியே வந்த அவருக்கு அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரைக்கும் பரோல் வழங்கப்பட்டுள்ளது.

## சனிக்கிழமைகளிலும் வகுப்புகள் நடைபெறும் தமிழகத்தில் பள்ளிக்கல்வித்துறை அறிவிப்பு




கொரோனா ஊரடங்குக் கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து தமிழக அரசு பல்வேறு தளர்வுகளை படிப்படியாகக் கொண்டு வந்தது. இதன்படி பாடசாலைகள், கல்வி நிலையங்கள் திறக்கப்பட்டன.

முதல் கட்டமாக ஒன்பதாம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை பாடசாலைகள் திறக்கப்பட்ட நிலையில், கடந்த நவம்பர் முதலாம் திகதி முதல் முதலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கிடையே தீபாவளி விடுமுறை மற்றும் தொடர் கனமழை காரணமாக பல மாவட்டங்களில் பாடசாலைகள், கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுமுறை நாள்களை ஈடுகட்ட அடுத்து வரும் அனைத்து சனிக்கிழமைகளிலும் பாடசாலைகள் செயல்படும் என்று தமிழக பள்ளிக் கல்வித்துறை அறிவித்துள்ளது. இது தொடர்பாக பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்களுக்கு, முதன்மைக் கல்வி அலுவலர்கள் சுற்றறிக்கை அனுப்பியுள்ளனர் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இந்திய இராணுவத் தளபதி நரவானே இஸ்ரேலுக்கு ஐந்து நாள்கள் பயணம்

இந்திய இராணுவத் தளபதி முகுந்த் நரவானே ஐந்து நாள்கள் பயணமாக இஸ்ரேலுக்குச் சென்றுள்ளார்.

இஸ்ரேலுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதே இந்தப் பயணத்தின் நோக்கமென இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ் உள்ளிட்ட அதிநவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய ஆயுதங்களையும் போர்த் தளவாடங்களையும் உருவாக்குவது குறித்தும் இந்தப்பயணத்தில் பேசப்படும் என செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், பாதுகாப்புத் துறைச் செயலாளர் அஜய் குமார் ஆகியோரும் அண்மையில் இஸ்ரேலுக்குச் சென்று வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய விமானப்படைத் தளபதியாக இருந்த ஆர்.கே.எஸ். பதூரியாவும் கடந்த ஒகஸ்டில் இஸ்ரேல் சென்றிருந்தார்.

சீனாவுடன் எல்லையில் பதற்றம் தொடர்ந்து நீடித்துவரும் நிலையிலும் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மீண்டும் தலையெடுத்துள்ள சூழலிலும் இந்திய முக்கிய பிரமுகர்களின் அடுத்தடுத்த இஸ்ரேல் பயணங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளன.

## 'முதல்வரின் முகவரி' என்ற புதிய துறை தமிழக அரசு அரசாணை வெளியிட்டது



தமிழகத்தில் முதலமைச்சரின் குறைதீர்ப்புத் துறைகளை ஒருங்கிணைத்து, 'முதல்வரின் முகவரி' என்ற புதிய துறை உருவாக்கப்பட்டு அதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்', 'முதலமைச்சரின் உதவிமையம்', 'முதலமைச்சரின் தனிப்பிரிவு' மற்றும் 'ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை' அமைப்பு ஆகியவை அனைத்தையும் ஒருங்கிணைத்து, இனி அவை அனைத்தும் ஒரே துறையாக செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தத் துறைக்கு, 'முதல்வரின் முகவரி' என பெயர் வைக்கப்பட்டுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் 'முதல்வரின் முகவரி' என்ற இந்தத்துறைக்கு சிறப்பு அலுவலராக ஷில்பா பிரபாகர் சதீஷ் நியமிக்கப்பட்டுள்ளார். இத்துறையில் மனுக்களுக்கு தீர்வு காண, ஒற்றை இணையத்தள முகப்பு பயன்படுத்தப்படும் என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இந்த துறைக்குத் தேவைப்படும் அனைத்து உதவிகளையும் வழங்கும் ஒருங்கிணைப்புத் துறையாக பொதுத்துறை இருக்கும். இத்துறைக்கு சிறப்பு அலுவலராக ஷில்பா பிரபாகர் சதீஷ் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

# கோவை ஆழியாறு பகுதியில் சுற்றுலா விழிப்புணர்வுத் திட்டம்




தமிழகத்தின் கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த ஆழியாறு மற்றும் வால்பாறை பகுதிகள், அந்த மாவட்டத்தின் முக்கிய சுற்றுலாப் பகுதிகளாக விளங்குகின்றன.

ஆழியாறில் உள்ள வண்ணத்துப்பூச்சி பூங்கா, வண்ண மீன் காட்சியகம் மற்றும் கவியருவி உள்ளிட்ட பொழுதுபோக்கு அம்சங்களைக் காண தினமும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

சுற்றுலாவிற்கு வரும் பயணிகளுக்கு வனவிலங்குகள், பறவைகளின் முக்கியத்துவம் குறித்து விளக்குவதற்காக சுற்றுலா விழிப்புணர்வுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், ஆழியாறின் அருகே வண்ணத்துப்பூச்சி பூங்காவிற்கு சுற்றுலாப் பயணிகள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பூங்காவில் அரிய வகை வண்ணத்துப்பூச்சிகள் குறித்து அவர்களுக்கு விளக்கப்பட்டது.

குழந்தைகளை கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள குரங்கு, கரடி, பாம்பு, புலி உள்ளிட்ட விலங்குகளின் சிற்பங்களையும் சுற்றுலாப் பயணிகள் கண்டு இரசித்தனர்.

பின்னர் சுற்றுலாப் பயணிகளை வனத்துறை அதிகாரிகள் வனப்பகுதிக்குள் அழைத்துச் சென்று இருவாய்ச்சிப் பறவை குறித்து விளக்கம் அளித்தனர்.

இதேபோன்று ஒவ்வொரு வார இறுதிகளிலும் சுற்றுலா விழிப்புணர்வுத் திட்டத்தின் கீழ் சுற்றுலாப் பயணிகளை வனத்திற்குள் அழைத்துச் சென்று வனவிலங்குகள், பறவை இனங்கள் மற்றும் தாவரங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளதாக வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதீட்டில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்

## திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூப் தெரிவிப்பு

சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதீட்டில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

2022 வரவு செலவுத் திட்டம் என்பது நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் முதலாவது வரவு செலவுத் திட்டம். நிதி அமைச்சர் என்றவகையில் பசில் ராஜபக்ஷ பற்றி நாட்டில் ஒரு நல்ல நம்பிக்கை இருக்கின்றது. அந்த நம்பிக்கை பாதிக்கப்படாத வகையில் வருகின்ற ஒரு மாதத்தில் டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி வரை அந்த பாதீட்டில் என்ன இருக்கின்றது என்பதைப் பற்றித் தெளிவாகக் கூறுகின்ற போது தான் எங்களால் அறிந்து கொள்ள முடியும்.

இதிலே சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெறுமனே நாடாளுமன்றத்தில் குந்தி விட்டு எழும்பி வராமல் உன்னிப்பாக இவ்விடயத்திலாவது கவனம் செலுத்தி இந்த நாட்டின் அரச ஊழியர்களுக்கு ஆசிரியர்களுக்கு, தொழிலாளர் களுக்கு, விவசாயிகளுக்கு என்ன நன்மை இருக்கின்றது என்பதைப் பற்றி கவனம் செலுத்தவேண்டியது ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் குறிப்பாக சிறுபான்மை மக்களை பிரதிபலிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உன்னதமான கடமையாகும். இந்த விடயத்தில் சமூக ஒற்றுமையை நாடாளுமன்றத்தில் வெளிக்காட்ட வேண்டிய தருணம் இதுவாகும்.

இதேவேளை ஒரு பிரேரணைக்கு ஆதரவு தெரிவிப்பது என்பது கடந்த காலத்தில் ஒரு வலுவை ஏற்படுத்திய இருபதாவது சட்ட மூலத்திற்கு ஆதரவு தெரிவித்ததன் மூலம் இன்று சிறுபான்மையினர் சிறையில் அடைக்கப்படுவதற்கு காரணமாக இருந்ததைப் போன்று இந்த வரவு செலவுத் திட்டம் ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் பாடுபடுத்துகின்ற அல்லது பழிவாங்குகின்றன ஒரு வரவு செலவுத் திட்டமாக அமையக்கூடாது.

இதில் இருக்கின்ற நன்மைகளையும் தீமைகளையும் தெளிவாகப் புரிந்து இதற்கு வாக்களிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பில் சாரணர்களுக்கான சின்னம் சூட்டல்

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இலங்கை சாரண சங்கத்தின் பிரதம ஆணையாளர் சட்டத்தரணி ஜனப்பிரித் பெணார்ண்டோ அவர்கள் விஜயம் மேற்கொண்டார். இதில் முதல் கட்டமாக 2019ம் ஆண்டு ஜனாதிபதி சாரண சின்னம் பெற்ற சாரணர்களுக்கான சின்னங்கள் பிரதம சாரண ஆணையாளர் அவர்களினால் அணிவிக்கப்பட்டது.

மட்டக்களப்புமாவட்டச்செயலகத்தில் மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளர் தேசகீர்த்தி வே.பிரதீபனின்தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் சாரண சங்கத்தலைவருமான க.கருணாகரன், மாவட்ட சாரண சங்கத்தின் தவிசாளரும் மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளருமான திருமதி. சுஜத்தாகுலேந்திரகுமார், பட்டிருப்பு கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் செ.மகேந்திரகுமார் உதவி மாவட்ட ஆணையாளர்கள் இராணுவத் தளபதிகள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் ஏனைய விருந்தினர்களுடன், சாரணர்களின் பெற்றோர்உட்படபலரும் கலந்து சிறப்பித்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இருபத்தாறு சாரணர்கள் சின்னம் சூட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

மாவட்ட சாரணிய வரலாற்றில் முதன்முதலாக பெண் சாரணர்கள் ஜனாதிபதி விருது பெற்றமை இதுவே முதல் தடவையாகும். அதிலும் குறிப்பாகமிகபின்தங்கிய பிரதேசமான மட்/பட்/திக்கோடை கணேச மகா வித்தியாலயத்தில் இருந்து ஐந்து பெண் சாரணர்கள் ஜனாதிபதி சின்னம் பெற்றனர். மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்து ஒரு சாரணர் ஜனாதிபதி விருதினைப் பெற்றார். இதற்கமைய பட்டிருப்பு வலய கல்வி அலுவலகத்திற்குஉட்பட்ட பாடசாலைகளில் இருந்து ஆறு சாரணர்கள் இவ் விருதினைப் பெற்று வலயத்திற்கு பெருமை சேர்த்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.



# உப்புவெளியில் விபத்து



திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிலாவெளி அபயபுர பிரதான வீதியில் வானுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரொருவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்து நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

நிலாவெளியில் இருந்து மார்பிள் பீச் செல்வதற்காக கண்டி அலவத்துக்கொட பிரதேசத்தில் இருந்து சுற்றுலா வந்த இளைஞர்கள் பயணித்துக்கொண்டிருந்த வான் ஒன்றுடன் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித் தனர். இவ்விபத்தில் திருகோணமலை மூன்றாம் கட்டை, புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபரொருவரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களை வைத்திருந்த 21 பேருக்கு எதிராக வழக்கு

அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்த 21 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளேன் என அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் எப்.எம். ஏ.காதர், நேற்று தெரிவித்தார்.

விசேட டெங்கொழிப்பு வாரத்தை யொட்டி, அக்கரைப்பற்று பிரதேசத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார், டெங்கொழிப்பு செயலணியினர் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து வீடு வீடாகச் சென்று சோதனையில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்தார்.

சுமார் 1,000க்கும் மேற்பட்ட வீடுகள் பரிசோதிக்கப்பட்டன எனவும் அதில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்த 21பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளேன் எனவும் 48 நபர்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக் கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டவர்கள், ஒரு வார காலத்துக்குள் சுற்றுப் புறச் சூழலை துப்புரவு செய்யுமாறும், அதனை மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

வெற்றுக் காணிகளை வைத்திருப்போர், அக்காணிகளில் டெங்கு நுளம்பு பெருகுவதை தடுக்கும் பொருட்டு, ஒரு வார காலத்துக்குள் துப்புரவு செய்ய வேண்டுமெனவும் இதனை மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

தற்போது பருவ மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் பொதுமக்கள் டெங்கு நுளம்பு உருவாகாமல் தடுப்பதற்கு சுற்றுப் புறச் சூழலை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டுமெனவும், கேட்டுள்ளார்.

வாரத்தில் ஒரு நாள் பொதுமக்கள் தங்களது வீடுகளையும் சுற்றுப்புறச் சுழலையும் துப்புரவு செய்ய வேண்டுமெனவும், டெங்கொழிப்பு தொடர்பான ஆலோசனைகள் தேவைப்படும் பட்சத்தில், சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாமென அறிவித்துள்ளார்.



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# பிலியந்தலையில் வாள்வெட்டு தாக்குதல்

## துண்டிக்கப்பட்டது கை

கொழும்பின் புறநகர் மடபாத பொல்ஹேன பிரதேசத்தில், மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்தார். ஓட்டோவில் வந்த இருவர் பொல்ஹேன சந்திக்கு அருகில் வீதியோரம் நின்றிருந்த ஒருவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன்போது பாதிக்கப்பட்டவரின் வலது கை, மணிக்கட்டுக்கு அருகில் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவரது இரண்டு கால்களிலும் கடுமையான வெட்டுக்கள் ஏற்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர் 42 வயதுடைய போதைப்பொருளுக்கு அடிமையான நபர் என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

கெஸ்பேவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 2 ஆயிரத்து 500 பசு மாடு இறக்குமதி செய்யப்படும்

## அரசு அறிவிப்பு

அரசாங்கம் சுமார் 2 ஆயிரத்து 500 பசு மாடுகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

துரித கதியில் பசு மாடுகள் இறக்குமதி செய்யப்பட உள்ளன என கால்நடை வள இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

நான்கு நிறுவனங்களால் இவ்வாறு மாடுகள் இறக்குமதி செய்யப்பட உள்ளன. இவ்வாறு பசு மாடுகளை வளர்ப்பதற்காக கண்டி மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் நான்கு காணிகள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளன. பசு மாடுகளை இறக்குமதி செய்வதற்கு குறித்த நிறுவனங்களுக்கு அரசாங்கம் உதவிகளையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும். நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் இவ்வாறு பசு மாடுகள் இறக்குமதி செய்யப்பட உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.



# புஸ்ஸலாவ நயப்பன தோட்டத்தில் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், பட்ஜட் ஊடாக மக்களுக்கு எவ்விதப் பயனும் இல்லை எனவும், உரப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை மையப்படுத்தி புஸ்ஸலாவ நயப்பன தோட்ட தொழிலாளர்களும், பிரதேச சபை உறுப்பினர்களும் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

புஸ்ஸலாவ நயப்பன தோட்டத்தில் முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமான இந்தப் போராட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள், தமிழ் முற்போக்கு கூட்ட ணியின் உடபளாத பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

அத்துடன், தோட்டத்தொழிலாளர்கள் போராட்டத்தில் பங்கேற்று, விலையேற்றத்தைக்கண்டித்து பேரணியாக நயப்பன அம்மன் ஆலய சந்தி முன்பாக ஆரம்பமாகி நயப்பன பஸ் தரிப்பிடம் வரை சென்று, அங்கு பதாதைகளை ஏந்தியவாறு, கோஷங்களை எழுப்பி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

'அத்தியாவசியப் பொருள்களின் விலையை உடனடியாகக் குறைக்கவும். வரவு – செலவுத் திட்டத்தில் மலையக மக்களுக்கு எதுவும் இல்லை. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவர்களின் தொழில் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் உரம் வழங்க வேண்டும். அதற்கான விசேட பொறிமுறை அவசியம். – எனவும் போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

# சாந்தபுரம் கிராமத்தில் இரத்ததான நிகழ்வு

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் தெரிவான பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உயர்தர மாணவர்களால் இரத்ததானம் வழங்கி வைக்கப்பட்டது. இந்த இரத்ததான நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் தெரிவான பல்கலைக்கழக மாகாணவர்கள் மற்றும் உயர்தர மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குருதி வழங்கும் நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்கள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தனர்.

# நாடு இருண்ட காலகட்டத்தை நோக்கி செல்வதாக எச்சரிக்கை

தடுப்பூசி செலுத்தப்பட்ட போதிலும் நாளுக்கு நாள் கொரோனா பாதிப்பு மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை சிறிதளவு அதிகரித்து வருவதால், நாடு இருண்ட காலகட்டத்தை நோக்கி செல்வதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்துள்ள சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் அன்வர் ஹம்தானி, அதிகளவான கொரோனா நோயாளிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவித்தார்.

176 மொத்த சிகிச்சை மையங்களில் 30 சதவீதம் தற்போது ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என அவர் கூறினார். இது எச்சரிக்கை மணியை ஒலிக்க வைக்கிறதென்றும் நிலைமை மோசமடைவதற்கு முன்பு அதைக் கட்டுப்படுத்துவது கட்டாயமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ்வாறு இல்லையெனில், சில மாதங்களுக்கு முன்பு இருந்த இருண்ட காலகட்டத்துக்கு நாடு செல்லுமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, நாடு கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையை அடைய வேண்டுமானால், சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் மக்களை வலியுறுத்தினார்.

# 120 வருட பழைமையான விளையாட்டு அறிமுகம்

120 வருடங்களுக்கும் பழைமையான நெதர்லாந்து நாட்டு கூடைப்பந்து கடற்கரை விளையாட்டு இலங்கையில் முதன்முறையாக திருகோணமலையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் திருகோணமலை பிரதான கடற்கரையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தக் கூடைப்பந்து போட்டி உலக நாடுகள் உட்பட இலங்கையில் உள்ளக அரங்கு மற்றும் வெளி மைதானங்களில் மாத்திரமே விளையாடப்பட்டு வந்தது. உலகின் 68 ஆவது நாடாக 2015 ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

கூடைப்பந்து விளையாட்டு இலங்கையில் முதல் தடவையாக கடற்கரையில் விளையாடுவதற்கு 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி கூடைப்பந்து-இலங்கைக்கான அமைப்பாளர் ஜோகஸ் வேன் நுன்ஸ்பீட அவர்களால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் போட்டியின் முக்கிய அம்சமாக உள்ளக அரங்கு உட்பட வெளியக மைதானங்களில் அணிக்கு 8 போட்டியாளர்கள் அடங்குவர். அவர்களில் கட்டாயமாக நான்கு பெண்களும் நான்கு ஆண்களுமாக அணியில் காணப்பட வேண்டும்.

அதனடிப்படையில் கடற்கரையில் விளையாடப்படும் கூடைப்பந்து போட்டியில் அணிக்கு நான்கு பேர் மாத்திரமே விளையாட முடியும். அவர்களில் இரு ஆண்களும் இரு பெண்களும் என விளையாடுகின்றமை கட்டாயம் என இதன்போது தெரிவிக்கப்பட்டது. மேலும் உலக நாடுகளில் 70 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இவ்விளையாட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டு சர்வதேச போட்டியாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் 68வது நாடாக இலங்கையிலும் இப்போட்டி அறிமுகம் செய்யப்பட்டு இன்றைய தினம் இலங்கையில் முதல் முறையாக கடற்கரையில் விளையாடுவதற்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் இப்போட்டி அறிமுக விழாவில் இலங்கை கடற்படையின் கிழக்கு மாகாண தளபதி ரியர் அட்மிரல் சஞ்சீவ டயஸ், கிழக்குமாகாண பல்கலைக்கழக திருகோணமலை வளாக பேராசிரியர் கனகசிங்கம், திருகோணமலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன, இலங்கை இராணுவத்தின் திருகோணமலை தலைமையக இரண்டாவது கட்டளைத் தளபதி மேஜர் எம்.என்.கே.குமார, நெஸ்லே லங்கா தனியார் நிறுவனத்தின் தேசிய விற்பனை நிர்வாக அதிகாரி மஞ்சுள நரங்கோட, கூடைப்பந்து – ஸ்ரீலங்கா அமைப்பின் பொதுச் செயலாளர் புஷ்பகுமார மதுரப்பெருமா மற்றும் நடுவர்கள், பிரதேச விளையாட்டு பயிற்றுவிப்பாளர், விளையாட்டு வீரர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.11.2021இல் வெளியிடப்பெற்றது.